பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 03 2025 **FRIDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து பெல்ஜியம் மன்னருடன் பேச்சு நடத்தினார்.
- உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இந்தியாவும் ரஷ்யாவும் முடிவு செய்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- நிலக்கரி உற்பத்தியில் இந்தியா தொடர்ந்து சாதனை படைத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.
- இந்தியா ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனகத் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பெல்ஜியம் மன்னர் பிலிப்புடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுகுறித்து பதிவிட்டுள்ள அவர், தொலைபேசி வாயிலாக நடத்திய இந்த பேச்சுக்களில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று நிதி மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், பட்ஜெட் அறிவிப்புகள் நாட்டின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் என்றார்.

வருமான வரி நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், புதிய வருமான வரி மசோதா மழைக்காலக் கூட்டத்தொடரில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

இதையடுத்து, மாநிலங்களவையில் நிதி மசோதா நிறைவேற்றப்பட்டது.

மக்களவையில் நிதி மசோதா கடந்த செவ்வாய்க் கிழமை நிறைவேற்றப்பட்டது.

<<<<<<>>>>>>>

இந்தியாவும் ரஷ்யாவும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த முடிவு செய்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

மாஸ்கோவில் நடைபெற்ற இருதரப்பு ஒத்துழைப்புக்கான மாநாட்டில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை மேம்படுத்த முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

2030-ம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகம் 100 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று கூறிய அவர், எரிசக்தி, பாதுகாப்பு, தொழில்நுட்பம், விவசாயம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இந்நிழ்ச்சியில் பேசிய ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு செர்ஜி லாவ்ரோவ், ரஷ்யா - யுக்ரைன் மோதல் விவகாரத்தில் இந்தியாவின் அணுகுமுறை பாராட்டத்தக்கது என்றார்.

இதற்காகப் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ரஷ்ய அதிபர் திரு விளாதிமிர் புடின் இந்தியாவில் பயணம் மேற்கொள்ள உள்ளதாகவும் இதற்கான முன்னேற்பாடுகள் நடைபெறுவதாகவும் திரு செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

குடியேற்றம் மற்றும் வெளிநாட்டவர் மசோதா மக்களவையில் நிறைவேறியது.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த மசோதா வகை செய்கிறது.

இந்த மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நாட்டின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்த இந்த மசோதா உதவிடும் என்றார்.

இந்தியாவுக்கு வரும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் இதன் மூலம் கண்காணிக்கப்படும் என்றும், தீவிரவாத நடவடிக்கைகள் தடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அகதிகள் குறித்து திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த திரு. அமித் ஷா, இந்த விவகாரத்தில் முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பின்பற்றிய அதே கொள்கையே தற்போதும் பின்பற்றப்படுவதாக கூறினார்.

இதுதொடர்பான புதிய பரிந்துரைகளைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நிலக்கரி உற்பத்தியில் இந்தியா தொடர்ந்து சாதனை படைத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

நேற்று புதுதில்லியில் 12ஆம் கட்ட நிலக்கரி சுரங்க ஏலத்தினை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

சர்வதேச அளவில் நிலக்கரி உற்பத்தி மற்றும் நுகர்வில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாக அவர் கூறினார்.

மின்உற்பத்தியில் 75 சதவீதத்தை நிலக்கரி சுரங்கங்கள் பூர்த்தி செய்வதாகவும் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

உலக அமைதிக்கும் வளர்ச்சிக்கும் வலுவான ஆதரவை பிரதமர் திரு நரேந்திர மோடி வழங்கி வருவதாக இஸ்லாமிய நாடுகளின் தூதர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்லாமிய நாடுகளின் தூதர்களுக்கான இஃப்தார் நோன்பு நிகழ்ச்சி இந்திய சிறுபான்மையினர் கூட்டமைப்பு சார்பில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் 19 நாடுகளின் தூதர்கள், இஸ்லாமிய அறிஞர்கள், மதத் தலைவர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இஸ்லாமிய நாடுகளுடனான இந்தியாவின் உறவு வலுவடைந்துள்ளதாக இதில் பங்கேற்ற பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வானொலி மூலம் மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி ஆகாஷவாணியில் நாளை மறுநாள் காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாடு முழுவதும் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்,

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை ஆகாஷவாணி ஒலிபரப்பு செய்கிறது.

இது, அன்றிரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள ஆகாஷவாணியின் அனைத்து நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் 88 சதவீத கிராமப்புற வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல்சக்தித்துறை இணையமைச்சர் திரு. சோமன்னா கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த 6 ஆண்டுகளில் தமிழகத்தில் 89 லட்சத்து 23 ஆயிரம் கிராமப்புற வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக திரு. சோமன்னா கூறினார்.

<<<<<<>>>>>>

பிரதமரின் நீர்ப்பாசன திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 545 நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக ஜல்சக்தித்துறை இணையமைச்சர் திரு. ராஜ்பூஷன் சௌத்ரி கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் அவர் இதனை தெரிவித்தார்.

468 நீர்நிலைகளில் பணிகள் முடிவடைந்துள்ளதாகவும், 77 நீர்நிலைகளில் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

இதன்மூலம் 13 ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் பயனடைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில் பிரதமரின் கிராமச்சாலைகள் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தால் மாவட்டத்தில் உள்ள ஊரகப் பகுதிகள் அதிகம் பயனடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 45 செகண்ட்ஸ்)

இந்த சாலைகள் அமைக்கப்பட்டதால், போக்குவரத்து எளிதாகியுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பொதுமக்கள் 30 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் கத்துவா பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 3 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அப்பகுதியில் நடைபெற்ற தேடுதல் வேட்டையின் போது ஏற்பட்ட மோதலில் 3 ராணுவ வீரர்களும் வீரமரணமடைந்தனர், 7 பேர் காயமடைந்தனர்.

<<<<<<>>>>>>

இந்தியா ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனகத் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அவர் 11-7, 5-11, 11-6, 11-6 என்ற செட்கணக்கில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பாவை வென்றார்.

<<<<<<>>>>>>

வியட்நாமில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 10-21, 21-19, 21-10 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Yudai Okimoto**–வை வென்றார்.

**<<<<<<>>>>>>**

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஷரத் கமல், **Manav Thakkar, Manush Shah, Snehit** ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<>>>>>>**

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் ரீதிகா ஹூடா வெள்ளிப்பதக்கத்தையும், 68 கிலோ எடைப்பிரிவில் **Mansi**-யும், 59 கிலோ எடைப்பிரிவில் **Muskan**–னும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**<<<<<<END>>>>>>>**